2. அறிவிப்புகள்

(அ) கைது செய்யப்பட்ட உறுப்பினர் விடுதலையானது குறித்து:

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

காவல் துறையினரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி எனக்கு வரப்பெற்றுள்ளது என்பதைப் பேரவைக்கு அறிவிக்கிறேன். "Panrutti Thiru. S. Ramachandran, MLA (PMK) who was arrested in Cr.No.1899/92u/s 124(A), 120(B), 153 (A) (B), 505 (1) (B) IPC and 13(1) and 13(2) Unlawful Activities (Prevention) Act was released by the High Court on his Bail on 24–9–92 at 18.30 p.m.'

3. விதி 110-ன் கீழ் அமைச்சர்களின் அறிக்கைகள்.

(அ) பெட்ரோலியப் பொருள்கள் மற்றும் இரசாயன உர விலை உயர்வை மத்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் குறித்து முதலமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றியமையாத பொருட்களான பெட்ரோலியப் பொருட்கள் விலையேற்றத்தைப் பற்றியும், உர விலையேற்றத்தைப் பற்றியும் பேரவைக்கு ஓர் அறிக்கை வெளியிட அனுமதி கோரி உள்ளார்கள். அவர்கள் இப்போது அந்த அறிக்கையைப் பேரவைக்கு வெளியிடுவார்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு கடந்த செப்டம்பர் 16 ஆம் தேதி முதல் பெட்ரோலியப் பொருட்களின் விலையைக் கடுமையான அளவிற்கு உயர்த்தியுள்ளது. மேலும் இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதியிலிருந்து பெட்ரோலியப் பொருட்களின் விலையும் வெகுவாக உயர்த்தப்பட்டது. குறிப்பிட்டுச் சொன்னால், சென்ற ஆண்டு விலைகளோடு ஒப்பிடும்போது, இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் அறிவித்த விலை உயர்வு, அதாவது டீசலுக்கு 3.43 சதவீதம் என்றும் ; பெட்ரோலுக்கு 3.87 சதவீதம் என்றும், சமையல் எரிவாயுவுக்கு 3.93 சதவீதம் என்ற அளவிலும் இருந்ததற்கே தமிழக அரசின் சார்பில் நான் நமது எதிர்ப்பைத் தெரிவித்திருந்தேன். அந்த விலை உயர்வை ஏழை எளிய மக்களால் தாங்க முடியாத சுமை என்றும் சுட்டிக் காட்டியிருந்தேன்.